# பூடான் பிரதமருடன் பாரத பிரதமரின் இருதரப்பு சந்திப்பு மற்றும் பல்வேறு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் பரிமாற்றம்

மார்ச் 22, 2024

பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், பூடான் பிரதமர் திரு. ஷெரிங் டோப்கே அவர்களை திம்புவில் 2024 மார்ச் 22 அன்று சந்தித்துப் பேசினார். இதில் பிரதமரை கௌரவிக்கும் வகையில் பூடான் பிரதமர் மதிய உணவு விருந்து அளித்தார். பாரோவிலிருந்து திம்பு வரையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் பயணம் முழுவதும் மக்கள் அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர். தமக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்புக்காக பூடான் பிரதமர் டோப்கே அவர்களுக்கு, பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

2. இரு தலைவர்களும் பன்முக இருதரப்பு உறவுகளின் பல்வேறு அம்சங்களைப் பற்றி விவாதித்தனர் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, விவசாயம், இளைஞர் பரிமாற்றம், சுற்றுச்சூழல், வனம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வுகளை உருவாக்கினர். இந்தியாவும் பூட்டானும் அனைத்து நிலைகளிலும் மிகுந்த நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் பரஸ்பர புரிதல் ஆகியவற்றைக் கொண்ட நீண்ட கால மற்றும் சிறந்த உறவுகளை கொண்டுள்ளன.

3. இந்த சந்திப்பின் ஒரு பகுதியாக, பாரத பிரதமர் மற்றும் பூடான் பிரதமர் ஆகியோர் எரிசக்தி, வர்த்தகம், டிஜிட்டல் இணைப்பு, விண்வெளி, விவசாயம், இளைஞர் பரிமாற்றம் ஆகியவற்றில் இரு நாடுகளுக்கும் இடையேயான பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டனர்.

https://bit.ly/3xa8U7y

**திம்பு**
**மார்ச் 22, 2024**